Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

ATHOOR

**CC.No. 242/2023**

**Deposition of PW.6 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் | ஜாதி | : | |
| த/பெ | : | முருகன் | தொழில் | : | மனித வள மேம்பாட்டு அதிகாரி |
| கிராமம் | : | பாறைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.05.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பாறைப்பட்டியில் குடியிந்துகொண்டு தனியார் கம்பெனியில் மேலாளராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 முருகன் எனது தகப்பனார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.10.2021 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நான் எனது கம்பெனியில் இருந்தபோது எனது மனைவி தீபா எனக்கு போன் மூலமாக எனது அப்பா முருகனை ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரில் உள்ள நாடக மேடை அருகே வைத்து அடித்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் எனது வேலையை முடித்துவிட்டு செம்பட்டி காவல்நிலையத்தில் எனது தகப்பனாருடன், எனது தாயாரும், எங்கள் குடும்பத்தார்களும் இருந்தார்கள். அப்போது நடந்த சம்பவம் சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி எனது தகப்பனார் புகார் மனு கொடுத்தார். அப்போது போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் உங்கள் பெரியப்பா மற்றும் பெரியப்பா மகன் என்றால் சரிதான். உங்களுக்கும், உங்கள் பெரியப்பா குடும்பத்தார்க்கும் பொது சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி

உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றும், சம்பவத்தை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். உங்கள் மனைவியை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. சண்டை சம்மந்தமாக உங்கள் அப்பாவிற்கு காயங்கள் ஏற்பட்டதா என்றால் காயம் இருந்தது, சட்டை கிழிந்திருந்தது. உங்களுக்கும், எதிரிகளுக்கும் உள்ள சொத்து பிரச்சனையை மனதில் வைத்து பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/–Thiru. S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor